We Shine Academy™
guiding you to get through

# தினசரி நடப்பு நிகழ்வுகள்

பிப்ரவரி
08
08-02-2021

Useful for TNPSC, POLICE Exams

# தேசிய செய்திகள்

- கேரள மாநிலம் கோழிக்கூடு பகுதியைச் சேர்ந்த அலி மணிக்.ஃ.பன் பத்ம ஸ்ரீ விருது பெற்றுள்ளார்.
  - அலி மணிக்.ஃ.பன் லட்சத்தீவிலுள்ள மினிகோய் பகுதியை பூர்விகமாக கொண்டவர். மத்திய கடல்மீன் வள ஆராய்ச்சி நிறுவனத்தில் மீன்கள் பற்றிய ஆராய்ச்சி பணியில் பணிபுரிந்தவர். ஆராய்ச்சி பணியில் இவர் கண்டறிந்த ஒரு அரிய வகை மீனுக்கு அபுதெப்டு.ஃ.ப் மணி.ஃ.பானி எனப் பெயர் வைக்கப்பட்டது.

➢ இவர் பிரெஞ்ச், ஜெர்மன், ஆங்கிலம் என 14 மொழிகளில் பேசவும், எழுதவும் தெரிந்தவர். 1981ல் அலி மணிக்ஃபனும் ஓமன் நாட்டு ஐரிஷ் வோயேஜர் டிம் சிர்வென் குழுவும் இணைந்து 27மீ நீளமுள்ள கப்பலை உலோகங்களை பயன்படுத்தாமல் மரக்கட்டைகளையும் தேங்காய் நார்களையும் பயன்படுத்தி தயாரித்தது. அந்த கப்பலுக்கு 'சோஹர்' என பெயரிடப்பட்டது. அதன் பின் ஓமனில் உள்ள ஒரு நகரம் 'சோஹர்' என அழைக்கப்பட்டது. தற்போது அந்த கப்பல் ஓமன் நாட்டு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

- பிரதமர் மோடி மேற்கு வங்காளத்தின் தோபி-துர்காபூர் பகுதியில் பிரதம மந்திரி உர்ஜா கங்கா திட்டத்தின் கீழ் இயற்கை வாயு பைப்லைன் பிரிவொன்றை நாட்டுக்கு அர்ப்பணித்துள்ளார்.
  - ஹல்டியா நகரின் ராணிசக் பகுதியில் நவீன 4 வழி பறக்கும் சாலை ஒன்றையும் நாட்டுக்கு அர்ப்பணித்துள்ளார்.

- ராமேஷ்வரத்தில் இரு இராட்சத பலூன் மூலம் 100 செயற்கைக் கோள்கள் பிப்ரவரி 7ல் விண்ணில் ஏவப்பட்டது.
    - ராமநாதபுரம் மாவட்டம் ராமேஷ்வரத்தில் டாக்டர்.அப்துல்கலாம் சர்வதேச அறக்கட்டளை, கலாம் இல்லம் ராமேஷ்வரம், இந்திய ஸ்பேஸ் ஜோன் மற்றும் மார்டின் தொண்டு நிறுவனம் இணைந்து 'டாக்டர் ஏபிஜேஎம் அப்துல்கலாம் விண்வெளி ஆராய்ச்சி' பேலோட் கியூப்ஸ் 2021 நிகழ்வின் படி 6 முதல் 12 வகுப்பு வரை பயிலும் அரசு பள்ளி மாணவர்கள், அறிவியல், தொழில் நுட்பம், பொறியியல், கணிதம் கல்லூரி மாணவர்கள் அனைவராலும் இணைந்து வடிவமைக்கப்பட்ட 100 பெம்டோ செயற்கைகோள் இரு ராட்சத பலூன் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.
    - விண்ணில் செலுத்தப்பட்ட பெம்டோ மிகச்சிறிய செயற்கைக்கோள்கள் மூலம் காற்றில் எவ்வளவு மாசு உள்ளது என்பதையும் கார்பன்டை ஆக்சைடு, ஆக்சிஜன் அளவையும் அறியலாம்.

- பிச்சை எடுப்பவர்கள் உழைத்து கவுரமாக வாழ அவர்களுக்கு சுய தொழில் கற்று கொடுத்து வாழ வழிகாட்டும் திட்டத்தை ராஜஸ்தான் அரசு தொடங்கியுள்ளது.
  - ஜெய்ப்பூரில் உள்ள பிச்சைக்காரர்கள் புனர்வாழ்வு முகாமில், ராஜஸ்தான் திறன் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு கழகத்தின் சார்பில் இந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.
  - இதில் 1100 பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள். முதல்கட்டமாக 40க்கும் மேற்பட்டவர்களுக்கு சுயதொழில் பயிற்சி முடிந்துள்ளது.
  - ராஜஸ்தான் திறன் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு கழக தலைவர் நீரஜ்கே பவான் ஆவார்.

- 21ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே இமயமலையில் பனிப்பாறைகள் உருகும் வேகம் 2 மடங்கு அதிகரித்து விட்டதாக 2019ல் வெளிவந்த 'சயின்ஸ் அட்வான்ஸ்' என்ற இதழின் முடிவு எச்சரித்துள்ளது.
  - 1975 -2000ம் ஆண்டு வரை காலத்தை காட்டிலும், 21ம் நூற்றாண்டின் துவக்கம் முதல் இமயமலை பனிபாறைகள் உருகும் அளவு 2 மடங்கு அதிகரித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் வெப்பமயமாதல் அதிகரிப்பதால் சராசரியாக பனிப்பாறைகள் 0.25 மீ உயரத்தை இழந்து வருவதாக ஆய்வில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

- கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டத்தில் 100அடி நீளம், 18 அடி அகலம் கொண்ட 'ஜலாரணி' என்ற பெயர் கொண்ட மிகப்பெரிய படகுவீடு பரசானிக்கடவு ஆற்றில் பிப்ரவரி 7 முதல் இயங்க தொடங்கியது.
  - ரூ 1 கோடி செலவில் உருவான இந்த படகு வீடு சுதேஷ் தரிசன் திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும். மலநாடு மலபார் ரிவர் குரூஸ் சுற்றுலா திட்டத்தின் ஒரு பகுதியாக முன்னாள் படகு ஓட்டுநர்கள் மற்றும் வெளிநாட்டிலுள்ள இளைஞர்களால் நன்மை சுற்றுலா கிளப் தொடங்கப்பட்டது.
  - மாநிலத்தில் 2வது பெரிய 'வாட்டர் டாக்ஸி' திட்டம் கொண்டு வரவும் இந்த கிளப் முயன்று வருகிறது.

- உத்தரகாண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் திடீரென ஏற்பட்ட பனிச்சரிவினால் தவுளிகங்கா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.
  - உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட பனிப்பாறைகள் திடீர் வெடிப்பு நிகழ்வால் அங்கு நிலவும் இயற்கை பேரிடர் நிலைமை குறித்து ஆய்வு செய்ய மத்திய அமைச்சரவை செயலாளர் ராஜுவ் கவுடா தலைமையில் தேசிய நெருக்கடி மேலாண்மை குழு கூட்டம் பிப்ரவரி 7 அன்று நடைபெற்றது.
  - உத்தரகாண்ட் பனிசரிவில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா ரூ 2லட்சம் நிவாரண தொகை வழங்கவும், காயமடைந்தோருக்கு 50 ஆயிரம் வழங்கவும் பிரதமர் மோடி ஒப்புதல் வழங்கியுள்ளார்.

# மாநில செய்திகள்

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

❑ பொது போக்குவரத்து மூலம் நாடு முழுவதும் 34500 கிமீ தூரம் பயணம் செய்து கின்னஸ் சாதனை படைக்கும் பயணத்தை புதுச்சேரியை சேர்ந்த கோ.வை.திலீபன், ஜா.ஆடம்சன் ராஜ் இருவரும் இணைந்து தொடங்கியுள்ளனர்.

# முக்கிய தினங்கள்

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

- பிப்ரவரி 8 - சாகீர் உசேன் பிறந்த தினம்
  - உசேன் பிப்ரவரி 8, 1897ல் பிறந்தார். ஜாகீர் உசேன் இந்தியாவின் 3வது குடியரசுத் தலைவர். இந்திய அரசு இவருக்கு 1954ல் பத்ம விபூஷன் விருதையும், 1963ல் நாட்டின் மிக உயர்ந்த விருதாகிய பாரத ரத்னா விருதையும் வழங்கி சிறப்பித்தது.

# Expected Questions

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

1. கேரள மாநிலம் கோழிக்கூடு பகுதியைச் சேர்ந்த அலி மணிக்ஃபன் 2021ம் ஆண்டு எந்த விருதை பெற்றுள்ளார்?

விடை: பத்ம ஶ்ரீ

2. பிரதமர் மோடி மேற்கு வங்காளத்தின் தோபி-துர்காபூர் பகுதியில் எந்த திட்டத்தின் கீழ் இயற்கை வாயு பைப்லைன் பிரிவொன்றை நாட்டுக்கு அர்ப்பணித்துள்ளார்?

விடை: பிரதம மந்திரி உர்ஜா கங்கா

3. ராமேஷ்வரத்தில் இரு இராட்சத பலூன் மூலம் எத்தனை செயற்கைக் கோள்கள் விண்ணில் ஏவப்பட்டது?

விடை: 100

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

4. ராமேஷ்வரத்தில் இரு இராட்சத பலூன் மூலம் 100 செயற்கைக் கோள்கள் என்று விண்ணில் ஏவப்பட்டது?

விடை: பிப்ரவரி 7ல்

5. பிச்சை எடுப்பவர்கள் உழைத்து கவுரமாக வாழ அவர்களுக்கு சுய தொழில் கற்று கொடுத்து வாழ வழிகாட்டும் திட்டத்தை எந்த அரசு தொடங்கியுள்ளது?

விடை: ராஜஸ்தான் அரசு

6. ராஜஸ்தான் திறன் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு கழக தலைவர் யார்?

விடை: நீரஜ்கே பவான்

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

7. 21ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே இமயமலையில் பனிப்பாறைகள் உருகும் வேகம் 2 மடங்கு அதிகரித்து விட்டதாக 2019ல் வெளிவந்த எந்த இதழின் முடிவு எச்சரித்துள்ளது?

விடை: ‘சயின்ஸ் அட்வான்ஸ்’

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

8. ஒவ்வொரு ஆண்டும் வெப்பமயமாதல் அதிகரிப்பதால் சராசரியாக பனிப்பாறைகள் எவ்வளவு மீ உயரத்தை இழந்து வருவதாக ஆய்வில் எச்சரிக்கப்பட்டுள்ளது?

விடை: 0.25 மீ

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

9. கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டத்தில் 100அடி நீளம், 18 அடி அகலம் கொண்டு உருவாக்கபட்ட படகுவீடு பெயர் என்ன?

விடை: ஜலாரணி

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

10. ரூ 1 கோடி செலவில் உருவான ‘ஜலாரணி’ என்ற பெயர் கொண்ட படகுவீடு எதன் கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட உள்ளது?

விடை: சுதேஷ் தரிசன்

11. பொது போக்குவரத்து மூலம் நாடு முழுவதும் 34500 கிமீ தூரம் பயணம் செய்து கின்னஸ் சாதனை படைக்கும் பயணத்தை தொடங்கியுள்ளவர்கள் யார்?

விடை: கோ.வை.திலீபன் மற்றும் ஜா.ஆடம்சன் ராஜ்

12. கோ.வை.திலீபன் மற்றும் ஜா.ஆடம்சன் ராஜ் இருவரும் பொது போக்குவரத்து மூலம் நாடு முழுவதும் எவ்வளவு தூரம் பயணம் செய்து கின்னஸ் சாதனை படைக்க உள்ளனர்?

விடை: 34500 கிமீ தூரம்

13. இந்தியாவின் 3வது குடியரசுத் தலைவர் யார்?

விடை: ஜாகீர் உசேன்

We Shine Academy™ Guiding you to get through

14. இந்திய அரசு சாகீர் உசேனுக்கு பாரத ரத்னா விருதை எந்த ஆண்டு வழங்கி சிறப்பித்தது?

விடை: 1963ம் ஆண்டு

We Shine Academy
Guiding you to get through

15. இந்திய அரசு சாகீர் உசேனுக்கு பத்ம விபூஷன் விருதை எந்த ஆண்டு வழங்கி சிறப்பித்தது?

விடை: 1954ம் ஆண்டு

# February 7th Quiz Questions and Answers

1. 18வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவிற்கு முதல் தங்கம் வென்றவர்?

a) சுஷில் குமார்

b) ரவி குமார்

c) யோகேஷ்வர் தத்

d) பஜ்ரங் பூனியா

We Shine Academy Guiding you to get through

2. ஹலீனா என்பது

a) இந்தியாவின் முதல் பேசும் ரோபாட்

b) பீரங்கி வாகன தகர்ப்பு ஏவுகணை

c) மீத்திறன் கொண்ட அணுக்கரு உலை

d) இரண்டாவது விமானம் தாங்கி போர்க்கப்பல்

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

3. இம்ரான்கான் பாகிஸ்தானின் எத்தனையாவது பிரதமர்?

a) 22

b) 21

c) 15

d) 20

We Shine Academy
Guiding you to get through

4. சர்வதேச மகிழ்ச்சி நாள் எந்த தேதியில் அனுசரிக்கப்பட்டது?

a) மார்ச் 19

b) மார்ச் 20

c) மார்ச் 21

d) மார்ச் 22

We Shine Academy Guiding you to get through

5. பின்வருவனவற்றில் லாவோஸின் தலைநகரம் எது?

a) ஜகார்த்தா

b) கோலாலம்பூர்

c) வியன்டியானே

d) கான்பெர்ரா

We Shine Academy
Guiding you to get through

# Today Quiz

We Shine Academy
Guiding you to get through

1. புற்று நோய் பற்றி அறியும் பிரிவின் பெயர்

a) செராலஜி

b) ஆங்காலஜி

c) கேன்சராலஜி

d) எக்காலஜி

2. இந்தியாவின் இரண்டாவது விண்வெளிக் கோள்

a) ஆப்பிள்

b) பாஸ்கரா

c) ஆரியபட்டா

d) ரோஹிணி

We Shine Academy™ Guiding you to get through

3. உலகிலேயே மிகப்பெரிய நூலகம் எங்கு உள்ளது?

a) மாஸ்கோ

b) கொல்கத்தா

c) லண்டன்

d) நியூயார்க்

We Shine Academy™ Guiding you to get through

4.5 வயது சிறுமி ஒருவர், வெறும் 4 நிமிடங்களில், எத்தனை நாடுகளின் கொடிகள், தலைநகரங்களை கூறி, உலக சாதனை படைத்துள்ளார்?

a) 160

b) 155

c) 145

d) 150

5. ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலில், இந்தியாவுக்கு எத்தனை குழுக்களின் தலைமை பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன?

a) 5

b) 4

c) 3

d) 2

## திருக்குறள்

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார்.”

**விளக்கம்:**

தீக்காய்வார் அகலாது அணுகாது இருப்பதுபோல் அரசர்களைச் சார்ந்திருப்பவர் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும். (தொழில் உவமை அணி).

# மிக்க நன்றி

We Shine Academy Guiding you to get through